

**ஷாஆலம் மேட்டுக் கோயிலை அப்புறப்படுத்துவதற்கு**

# இந்தியர் எண்ணிக்கை காரணமா? ஏற்றுக் கொள்ள மாட்டோம்

- செக்ஷன் 11இல் மாற்று நிலம் அல்லது ஆலயத்தையொட்டி மேம்பாட்டுப் பணிகள்!
- கெடா ஆலய விவகாரத்தை திசை திருப்பும் முயற்சியா?

(பார்த்திபன் நாகராஜன் / ஆர். குணா)

கோலாலம்பூர், ஜூலை 28-

ஷாஆலம் மேட்டுக் கோயிலை அப்புறப்படுத்துவதற்கு அப்பகுதியின் குறைவான இந்தியர்கள் எண்ணிக்கை ஒரு காரணமாக இருந்தால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று சிலாங்கூர் மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் வீ. கணபதி ராவ் நேற்று திட்டவட்டமாகக் கூறினார்.

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

## ஷாஆலம் மேட்டு...

ஷாஆலம் செக்ஷன் 11இல் அமைந்துள்ள ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்ற கூட்டரசு நிதி அலுவலகம் நோட்டீஸ் ஒன்றை கொடுத்துள்ளது.

அவ்வாலயம் அமைந்துள்ள நிலம் கல்வியமைச்சுக்கு சொந்தமானது. அங்கு பள்ளி சம்பந்தமான மேம்பாட்டுப் பணிகள் கொண்டுவரப்படுவதால்ஆலயத்தைஅப்புறப்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது என காரணம் காட்டப்படுகிறது.

இந்திய சமுதாயத்தினரிடையே மீண்டும் ஒரு சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்த ஆலய விவகாரம் தொடர்பில் சிறப்பு சந்திப்புக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டரசுநிலஇலாகாஅதிகாரிகள்,ஒற்றுமைத்துறை அமைச்சின் அதிகாரிகள், ஆலய நிர்வாகத்தினர், மலேசிய இந்து சங்கம், இந்து தர்ம மாமன்றம் உட்பட பல இந்து தலைவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ்விடத்தில் ஆலயம் முதலில் வந்ததா, பள்ளி முதலில் வந்ததா என்ற கேள்வி எழுந்தால் அதற்கு தயங்காமல் ஆலயம் என்று கூறலாம். சுதந்திரத்திற்கு முன்பே இவ்வாலயம் அங்கு இருந்திருக்கிறது.

அவ்விடத்தில் ஆலயம் இருக்கிறது என்று தெரிந்து தான் அந்நிலம் கல்வியமைச்சுக்கு கெசட் செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தை ஒதுக்கியே பள்ளிக்காக மேம்பாட்டுப் பணிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இப்போது மட்டுமே ஏன் ஆலயத்தை அப்புறப்படுத்த வேண்டும்.

அச்சுற்றுவட்டாரத்தில் இந்தியர்கள் பெரும்பான்மையாக இல்லாததால் ஆலயத்தை அப்புறப்படுத்துவதற்குதிட்டமிடப்படுகிறதாஎன்று பரவலாக பேசப்படுகிறது.

அது உண்மையா? அப்படியென்றால் வரும் காலங்களில் நாட்டில் எந்த பகுதியிலும் இந்தியர்கள் பெரும்பான்மையாக இருக்க மாட்டார்கள். அதற்காக கெஜட் (அரசு பதிவேட்டில்) இடம் பெற்ற ஆலயங்களுக்கு ஆபத்து வருமா என்ற கேள்விகளை அந்த அதிகாரிகளிடம் முன்வைத்தேன். அதற்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

இருந்த போதிலும் ஆலயங்கள் அப்புறப்படுத்துவதற்கு அப்படியொரு காரணம் இருந்தால் அதை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். சிலாங்கூர் மாநில அரசும் அதற்கு சம்மதம் தெரிவிக்காது என அதிகாரிகளிடம் திட்டவட்டமாக கூறினேன்.

இவ்வாலய விவகாரத்தில் சுமுக தீர்வு காண்பதற்கு கூட்டரசு நில அலுவலக அதிகாரிகளிடம் ஒரு சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

ஆலயம் பல ஆண்டுகள் அவ்விடத்தில் உள்ளது. ஆகையால் ஆலயத்தையொட்டி எந்தவொரு மேம்பாட்டு பணிகளையும் மேற்கொள்ளலாம். இதனால் ஆலயத்திற்கு எந்தவித பாதிப்பும் வரக்கூடாது.

அப்படி முடியாது. ஆலயத்தை அப்புறப்படுத்தியே ஆக வேண்டும் என்றால், ஆலயத்திற்கு மாற்று நிலம் வழங்க வேண்டும். அதுவும் செக்ஷன் 11லேயே ஒதுக்க வேண்டும் என ஆலய நிர்வாக்த்தினர் உறுதியாக உள்ளனர்.

இக்கோரிக்கைகளுக்குகூட்டரசுநிலஅலுவலகமும் மத்திய அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதே வேளையில் சிலாங்கூர் மாநிலத்தில் ஆலயத்தால் மீண்டும் எந்தவொரு பிரச்சினையும் எழக்கூடாது. எந்த விவகாரத்தையும் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மாநில அரசின் தலையீட்டை விரும்பவில்லை என்றால்நேரடியாகஆலயநிர்வாகத்தினரைஅழைத்து பேசுங்கள். அதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை.

எது எப்படியிருந்தாலும் இவ்வாலய விவகாரம் சர்ச்சையாகக் கூடாது என்று வீ. கணபதிராவ் செய்தியாளர்களிடம் கூறினார்.

இதனிடையே அண்மையில் கெடாவில் ஓர் ஆலயம் உடைக்கப்பட்டது. அதை திசைத்திருப்பும் வகையில் செக்ஷன் 11இல் ஆலய விவகாரம் தொடங்கப்பட்டுள்ளதா என நான் சந்தேகிக்கின்றேன்.

எது எப்படியிருந்தாலும் இவ்வாலயத்தை பாதுகாக்க ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என அரசியல் பார்க்காமல் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

இவ்வாலய விவகாரத்திற்கு நல்ல தீர்வை காண அனைவரும் சேர்ந்து முயற்சிப்போம் என்று கணபதிராவ் கேட்டுக் கொண்டார்.

Akhbar : Malaysia Nanban
Tarikh : 28 Julai 2020
Muka surat : 1 & 13
Sentimen : Negatif

Tajuk : **Jumlah penduduk masyarakat India yang berkurangan di kawasan penempatan kuil merupakan alasan yang tidak boleh diterima**

Ringkasan : Exco Kerajaan Selangor, YB V. Ganapathi Rao memberitahu dengan tegas bahawa mereka tidak akan menerima alasan yang menyatakan jumlah penduduk masyarakat India yang berkurangan di kawasan penempatan kuil tersebut merupakan faktor untuk mengalihkan kuil. Bagi menangani isu-isu berkaitan dengan rumah ibadat masyarakat India, suatu perjumpaan khas telah dianjurkan. Pegawai-pegawai daripada Pejabat Tanah dan Kementerian Perpaduan Negara, ahli-ahli jawatankuasa kuil, Persatuan Hindu Sangam dan Malaysia Hindu Dharma Maamandram turut serta dalam perjumpaan tersebut. Pihak jawatankuasa kuil telah menyeru agar tidak menjejaskan kuil dengan apajua kerja pembangunan yang dilakukan di kawasan itu dan mereka juga minta tanah gantian jika hendak mengalihkannya.